[3rd November 1966

திரு. டி. கார்ச்சா கவுடர் : சமீபத்தில் வர இருக்கிற பொதுத் தேர்தலின்போது போலீஸ்காரர்கள் தேர்தல் பந்தோபஸ்து ட்யூட்டியில் ஈடுபட வேண்டியிருக்குமாதலால், அந்தச் சமயம் ஹோம் கார்டுகளைப் பயன்படுத்திக்கொள்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்க உத்தேசம் அதுதான்.

திரு. கரு. சீமைச்சாமி : போலீஸ் ஸ்டேஷன்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி ஏதாவது சிபார்சு செய்திருக்கிறதா? அதன்மீது அரசாங்கம் பரிசிலனை செய்து எடுத்த முடிவு என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே ஐ. ஜி. கேட்டிருந்தார்கள். இப்போது ஒன்றும் அதிகரிப்பதாக இல்லை.

திரு. எஸ். மணி : எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் நிறையப் பேர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் போலீசில் சேர விரும்பு கிறார்கள். ஆகவே தற்சமயம் அதிக மாணவர்களைப் போலீசில் சேர்க்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் சபாநாயகர் : அங்கே போய்ப் படிக்கப் போகிறார்களா? வேலை பார்க்கப் போகிறார்களா? (சிரிப்பு)

* 367 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் எங்கெங்கு விசேஷ போலீஸ் (ரிஸர்வ் போலீஸ்) படைகள் அனுப்பப்பட்டன?

(இ) அவ்வாறு அனுப்பியதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) 1965 டிசம்பரில் தஞ்சை மாவட்டத்தில் பின்வரும் இடங்களில் நிகழ்ந்த உழவர்கள் கிளர்ச்சி சம்பந்தமாகவும், ஏனைய சட்ட-ஒழுங்குச் சிக்கல்கள் சம்பந்தமாகவும் மலபார் சிறப்புப் போலீஸ் படைப்பிரிவுகள் அவ்விடங்களுக்கு அனுப்பப்பட்டன.

பொறையார், திருவாரூர், நாகப்பட்டினம், கீவளூர், மாயூரம், கூத்தநல்லூர், வேட்டைக்காரனிருப்பு, நன்னிலம் ஆனைக்காரன் சத்திரம்.

படைக்கலந்தாங்கிய ரிசர்வ் போலீஸ் படைப்பிரிவுகள் 1965 டிசம்பரில் வெள்ள இடர்தணிப்பு வேலைகள், பந்தோபஸ்து வேலைகள் முதலியவை சம்பந்தமாக கீழ்க்கண்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டன—

கரம்பை, அறந்தாங்கி, தஞ்சாவூர், கும்பகோணம்.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி மிகவும் குறைத்துக் கொடுக்கப்படுகிறது. அதிகமாகக் கூலி கேட்கிறார்கள் என்பதற்காக மிராசுதார்கள் விசேஷப் போலீஸ்

3rd November 1966]

படையை வைத்துக்கொண்டு கூலியைக் குறைத்து வருகிறார்கள். ஆகவே, அறுவடைக் கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

MR. SPEAKER : That question does not arise here.

அனுவசியமாகப் போலீசை உபயோகப்படுத்தாமல் இருப்பார்களா என்று கேள்வியைப் போடுங்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : அறுவடைக் காலங்களில் விவசாயத் தொழிலாளர்கள் அதிக கூலி கேட்கிறார்கள் என்பதற்காக போலீஸ் படையை வைத்துக்கொண்டு குறைந்த கூலி கொடுக்கிறார்கள். அம்மாதிரி போலீஸ் படையினரை அனுப்பாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : நிலம் உடையவர்கள் சொற்பக் கூலியைக் கொடுத்துவிட்டு ஏழைகளை ஏமாற்றுவதற்குப் போலீஸ் படையை உபயோகப்படுத்துவது என்பதே இல்லை. ஏழைகளுடைய கூலியையும் அவர்கள் அபகரிக்கக்கூடாது. தொழிலாளர்களும் அநியாயமாகக் கூலி கேட்டு குழப்பம், குதர்க்கவாதம் பண்ணக்கூடாது. உணவு நெருக்கடி சமயத்தில் இத்தகைய சந்தர்ப்பங்களில் அமைதி, ஒழுங்கை நிலைநாட்டத்தான் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. கோ. சி. மணி : நிலக்காரர்களுக்குப் பாதுகாப்பாக போலீஸ் படையினர் அனுப்பப்படுவதாகச் சொன்னார்கள்.

கனம் சபாநாயகர் : அமைச்சர் அப்படிச் சொல்லவில்லை. "ப்ரீச் ஆஃப் பீஸ்" இருக்கிறபோது லா அண்டு ஆர்டரை நிலை நிறுத்த போலீஸ் அனுப்பப்படுவதாகச் சொன்னார்கள்.

திரு. கோ. சி. மணி : இந்தத் தகராறுகள் எழும்பொழுது எல்லாம் போலீஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் அங்கே போய் என்ன என்ன காரணங்களால் தகராறுகள் ஏற்பட்டன என்ற விவரங்களை ஆராய்ந்தார்களா? அது சம்பந்தப்பட்ட தகவல்களை அமைச்சர் அவர்கள் பெற்றிருக்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் அதுமாதிரித் தகராறுகள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் போலீஸ் அதிகாரிகள் அனுப்பப்படுகிறார்கள். அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்றுதான் அவர்கள் போகிறார்கள். ஏழைகளைக் கஷ்டப்படுத்தவேண்டுமென்று அவர்கள் போகவில்லை. அங்கே சண்டை சச்சரவு, கொலை, குத்து ஏற்பட்டு விடக்கூடாது, அமைதி ஏற்படவேண்டும் என்பதற்காகத் தான் போகிறார்கள்.

கனம் சபாநாயகர் : கனம் உறுப்பினர் "எதற்காக குழப்பம் வந்தது என்று காரணங்கள் அறிந்து அதைப் பரிசீலனை செய்தார்களா?" என்று கேட்கிறார்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : எப்படியும் போலீஸ் அதிகாரிகள் அங்கு போய்த்தான் ஆகவேண்டும், இல்லாவிட்டால் குழப்பம் ஏற்பட்டுவிடும்.

[3rd November 1966

திரு. கோ. சி. மணி : கனம் சபாநாயகர் அவர்களே, அங்கேயுள்ளவர்கள் தெரிவித்த கருத்தைப் போலீஸ் கேட்டு, அதன்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் நான் கேட்டேன். நியாயமான கூலி, அடிப்படைக் கூலி நிர்ணயம்.

கனம் சபாநாயகர் : அந்தக் கேள்வி இதிலே வராது. நியாயமான கூலி எவ்வளவு என்பதெல்லாம் இதில் வராது. அதற்கு வேறு கேள்வி போடுங்கள்.

திரு. கோ. சி. மணி : துணைக் கேள்வி போட்டால். . . .

கனம் சபாநாயகர் : துணைக் கேள்வி போட்டால்கூட இதில் வராது.

திரு. கோ. சி. மணி : விவசாயிகள் அதிகக் கூலி கேட்டு, அவர்களுக்குக் குறைத்து கூலி கொடுத்து, அதற்காக போலீஸ் அனுப்பப்பட்டு . . .

கனம் சபாநாயகர் : கூலி நியாயமா இல்லையா என்பதைக் கவனிக்கவேண்டியது ஹோம் டிபார்ட்மெண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : லேபர் டிபார்ட்மெண்ட்.

கனம் சபாநாயகர் : அதைக் கவனிப்பது லேபர் டிபார்ட்மெண்ட். The hon. Member may therefore put a separate question for that. Here the question is whether the Police were used unnecessarily or illegally or not?

திரு. ஆ. கு. சுப்பையா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது உழவர்கள் கலவரம் செய்கிறார்கள், அதற்காக அனுப்பப்பட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் எதற்காகக் கலவரம் செய்கிறார்கள் என்று சொல்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : உழவர்கள் யாரும் கலகம் செய்யவில்லை. என்னைக்காட்டிலும் உழவர்களிடத்திலே அன்புள்ளவர்கள் யாரும் இல்லையென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கள்ள நோட்டுகள்

***368 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூரில் 1966 மே முதல் வாரத்தில் கள்ள நூறு ரூபாய் நோட்டுகள் ஏதேனும் பிடிபட்டனவா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.